



# கர்த்தரை நினையாமற்போனோம்

சகோதரி.
கலா வின்செண்ட்ராஜ்



அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம். ஏசாயா 53:3

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

நாம் வாழும் இந்த உலகத்தில் பெற்றோரை பிள்ளைகள் நினையாமல் மறந்து போகிறதை பார்க்கிறோம். பிள்ளைகளையும் பெற்றோர் கைவிடுகிறதையும், மறந்து போகிறதையும் பார்க்கிறோம். நம்மிடம் நன்மை பெற்றவர்கள் அதைப்பற்றின ஒரு நன்றியுணர்வு கூட இல்லாமல் நடந்து கொள்ளும் போது, சில வேளை எதிராய் செயல்படும் போது உள்ளம் உடைந்து போகிறோம். அதைப் போலவே நம் ஆண்டவர் இயேசுவைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி சொல்லும் போது நாம் எப்படி அவரிடம் நடந்து கொள்கிறோம் என்பதைக் சொல்லுகிறார். நம்முடைய முகங்களை அவரை விட்டு மறைத்துக் கொண்டோம். அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாமற் போனோம். ஐயோ! அவரை நாம் மறந்து போனோம். ஆண்டவர் எவ்வளவு உள்ளம் உடைந்திருப்பார் பாருங்கள். இன்றைக்கு நாம் மறந்த காரியங்களை நினைவு கூர்ந்து ஆண்டவரிடம் நம்மை அர்ப்பணிப்போமா?

> அவனது ஞாபகத்தில் தகப்பன் வீடு வந்தது, தன் நிலையை உணர்ந்து தாங்கித்தரியாமல், தாமதிக்காமல் எழுந்து தகப்பன் வீட்டிற்கு வந்தான்.

## தகப்பன் வீட்டை நினைக்க வேண்டும்

பட்டயத்துக்குத் தப்பினவர்களே தங்கித் தரியாமல் நடந்து வாருங்கள்; தூரத்திலே கர்த்தரை நினையுங்கள், எருசலேம் உங்கள் ஞாபகத்தில் வரக்கடவது. எரேமியா 51:50

யாரை விழுங்கலாம், யாரை ஆண்டவரை விட்டு பிரிக்கலாம், யாரை பாவத்தில் விழப்பண்ணலாம் என்று பொல்லாத பிசாசு வகைதேடி சுற்றித் திரிகிறான். அவனுடைய பட்டயத்திற்கு அநேகர் இரையாகிப் போனார்கள். பலவிதமான போராட்டங்களை சந்தித்து தேவனை விட்டு தூரமாய் போய் விட்டார்கள். இளையமகன் உவமையில் தகப்பனிடம் சொத்தைப் பிரித்துக் கேட்டு வாங்கி சென்று நண்பர்களோடு உல்லாசமாய், ஊதாரியாய் சுற்றும்படி அவன் தூரதேசத்திற்குப் போய் விட்டான். பிசாசு விரித்தக் கண்ணி தகப்பனை விட்டு அவனை தூரமாய் பிரிப்பதுதான். தகப்பனை விட்டு அவனைப் பிரித்து, தன் இஷ்டம் போல அலைய விட்டு, தன்னுடைய ஆட்களில் ஒருவனாக அவனை மாற்றி விட்டான். அதன் பின்பு தகப்பனைப் பற்றின எண்ணமே அவன் மனதிற்குள் வரக்கூடாதபடி செய்தான். அதன் விளைவு எல்லாம் இழந்து குறைவுபடத் தொடங்கினான். ஒருவேளை உணவைத் தரக்கூட ஒருவரும் அவனுக்கு இல்லை. உபா 32:18-ல் உன்னை ஜெனிப்பித்த கன்மலையை நீ நினையாமற்போனாய், உன்னைப் பெற்ற தேவனை மறந்தாய் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இந்த வாலிபன்

தகப்பனை மறந்து தூரத்தில் நின்றான். புத்தி தெளிந்த போது அவனது ஞாபகத்தில் தகப்பன் வீடு வந்தது. தகப்பன் வீட்டிலிருக்கும் வேலைக் காரர்களுக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறதே நான் பட்டினியாய் இருக்கிறேனே என்று, தன் நிலையை உணர்ந்து தங்கித்தரியாமல், தாமதிக்காமல் எழுந்து தகப்பன் வீட்டிற்கு நடந்து வந்தான். தேவன் அவனை கைவிடவில்லை. அந்த அன்பு நிறைந்த தகப்பன் அவன் குறைவுகளை மன்னித்து சேர்த்துக் கொண்டார். உங்கள் ஞாபகத்திலும் தகப்பன் வீடு வரட்டும். காலம் தாமதிக்காமல், தங்கிதரித்து நிற்காமல், உடனே எழும்பி தகப்பனிடம் வாருங்கள். இயேசு தகப்பன் உங்களை ஏற்றுக் கொள்ள இன்னும் ஆவலோடிருக்கிறார்.

## அவருடைய வார்த்தைகளை நினைக்க வேண்டும்

மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். லூக் 24:27



அந்நேரமே எழுந்திருந்து எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள் என்று 33-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆண்டவருடைய சீஷர்களில் இரண்டு பேர் எருசலேமிலிருந்து ஏழு அல்லது எட்டு மைல் தூரமாய் இருக்கிற எம்மாவு என்ற ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாய் எருசலேமை விட்டு தேவ சமூகத்தை விட்டு, தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிக்க முடியாமல் மந்த இருதயத்தோடு போய்க் கொண்டு இருந்தார்கள். ஓசியா 4:6-ல் என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள். நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன், என்று ஆண்டவர் சொல்லியிருந்தாலும், சீஷர்களோடு சேர்ந்து நடந்தார். அவர்களை விட்டு விடவில்லை. வேதவாக்கியங்களை மறந்து, அதை விசுவாசிக்க முடியாமல் மந்த நிலையில் போய்க் கொண்டிருக்கிற அவர்களுக்கு தேவனுடைய வார்த்தைகளை ஞாபகம் மூட்டி திரும்ப எருசலேமுக்கு வரச் செய்த ஆண்டவர்

இன்றைக்கு உங்கள் வாழ்விலும் வேதத்தை மறந்து, அதை விசுவாசிக்க முடியாமல் மந்த நிலைமையில் போய்க் கொண்டிருக்கிற உங்களை இந்த செய்தியின் வழியாய் இயேசு சந்தித்து உங்களோடு பேசுகிறார். நீங்கள் அவரை மறந்திருந்தாலும், அவரை விசுவாசிக்க முடியாத மந்த இருதயத்தோடு இருந்தாலும், அவர் உங்களைக் கைவிடுவதில்லை. உயிர்த் தெழுந்த இயேசு அன்றைய தினமே மற்ற சீஷர்களை சந்திப்பதற்கு முன்பாக தன்னை மறந்து தூரம் போய்க் கொண்டிருந்த இந்த இரண்டு சீஷரோடு தானும் சேர்ந்து நடக்கலானார் என்று அந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. நீங்கள் மனம் கலங்கா திருங்கள். நீங்கள் நினையாமல் போயிருந் தாலும், ஆண்டவர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் மறக்கவில்லை. உங்கள் நினைவாக, உங்களோடு தான் இருக்கிறார். நீங்களும் அவருடைய வேதத்தை, வார்த்தையை விசுவாசித்து, கைக்கொண்டு நடக்க உங்களை ஒப்புக்கொடுங்கள்.

## அவர் செய்த நன்மைகளை நினைக்க வேண்டும்

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. சங் 103:2. அவருடைய செயல்களையும் அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள். சங் 78:11

நாம் சீக்கிரத்தில் தேவன் செய்த, மற்ற மனிதர்கள் நமக்குச் செய்த நன்மைகளை மறந்து போகிறவர்களாக இருக்கிறோம்.

அதனால் தான் ஆண்டவர் மறவாதே என்கிறார். சங் 106:13 சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். சங் 137:5.6 எருசலேமே நான் உன்னை மறந்தால் என் வலதுகை தன் தொழிலை மறப்பதாக. நான் உன்னை நினையாமலும் எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும் போனால் என் நாவு மேல் வாயோடு ஒட்டிக்கொள்வதாக என்று இந்த சங்கீதக்காரன் சொல்கிறான்.



ஏன் இன்று நம்மால் துதிக்க முடியவில்லை. எந்த வேலையை செய்தாலும் ஒரு குழப்பம். என்ன முடிவு எடுப்பது. என்ன செய்தால் நல்லது. ஏன் இந்த நிலை திடீரென்று செய்ய வேண்டியவை கூட மறந்து போகிறது. சிலர் பேசிக் கொண்டிருக்கும் போது கூட இப்ப நான் என்ன பேசினேன். அதற்குள் மறந்து விட்டேன் என்பார்கள். ஏன் இந்த குழப்பம்? தேவனை மறந்தால் தான். அவரை நினையாமல் போனதால் தான். நாம் துதிக்க முடியாதபடி நாவு மேல் வாயோடு ஒட்டிக் கொண்டு ஊமையாகி விட்டது. செய்ய வேண்டிய நல்ல கிரியைகள் மறந்து போகின்றது. அவர் உங்களுடைய இந்த அக்கிர மத்தை மன்னிக்கிறவர். உங்களுடைய நோய்களை குணமாக்குகிறவர். உங்கள் பிராணனை அழிவுக்கு விலக்கி விடுவிக்கிறவர். உங்கள் வயது திரும்ப வாலவயது போல ஆகும்படி செய்கிறவர். நீங்கள் பூர்வ நாட்களில் இருந்தது போல இருக்கச் செய்வார்

ஓசியா 2:13.14.15-ன்படி அவள் பாகால்களுக்குத் தூபங்காட்டி. தன் நெற்றிப் பட்டங்களினாலும் தன் ஆபரணங்களினாலும் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு. தன் நேசரைப் பின்தொடர்ந்து. என்னை மறந்துபோன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆயினும். இதோ. நான் அவளுக்கு நயங்காட்டி. அவளை வனாந்தரத்தில் அழைத்துக்கொண்டுபோய். அவளோடே பட்சமாய்ப் பேசி. அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத் தோட்டங்களையும். நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்; அப்பொழுது அவள் அங்கே. தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்து தேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாடுவாள் என்று சொல்லப்

பட்டுள்ள வார்த்தையின்படி அவர் நம்மோடு பட்சமாய் பேசி திரும்பவும் நாம் வாய் திறந்து பாடவும்,. அவரை துதிக்கவும். நம்மை நன்மையால் நிரப்பவும் ஆவலோடு இருக்கிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே அவரை நினையாமற்போன. மறந்துபோன நம்மை மன்னித்து மறுபடியும் அவருடைய அன்பினால் நிரப்பி. அவருடைய பிள்ளையாக. சாட்சியாக வாழ கிருபை தருவாராக. ஆமென்

24 மணி நேர
ஜெப உதவிக்கு
94428 00449
94428 00447
94980 00449